THE
# MORNING STAR

Registered as a Newspaper | Published every Friday

VOL. 105 } JAFFNA, FRIDAY, MAY 18, 1945 { NO. 19.

JAFFNA COLLEGE LIBRARY
MAY 18 1945
VADDUKODDAI, CEYLON.

**NOTICE**

Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention to the matter sent.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

**Calendar of Events**

May 19: A whole day Conference of the Friends of the Ashram at the Christa Seva Ashram.

" 25—J. N. E. S. Annual Meeting.

" 25-28 J. I. C. C. F. Teachers' Camp at the Girls' English School, Uduvil.

" 30—H. E. the Governor's visit to Jaffna.

## NEWS

### LOCAL

### Landmarks in the History of the Christa Seva Ashram

The following dates of important events in the history of our Ashram are gleaned from "A Review of the Christa Seva Ashram from May 1939 to April 1945" published recently. As the Sevak, Rev. Selvaretnam, proceeds to India on study leave for two years, the Ashram enters a new phase and the occasion we believe, is appropriate for a peep into the past history of the Ashram, an institution which he with God's guidance has been building up during the last six years.

Nov. 9, 1938: Dr. Miss I. H. Curr, cut the first sod for a well in the compound.

Jan. 9, 1939: Dr. Visser't Hooft of the World's Student Christian Federation laid the foundation for the Chapel, the gift of the J. I. C. C. F.

—Foundations laid for the following Cottages: Lambert Memorial Cottage, Bethel, and Shanti.

May 20, 1939: Rev. Selvaretnam and one other associate took up residence in the compound. In the little Chapel Shed, the members of the Board of Management and a few other friends assembled to commit the work to God's Gracious protection and keeping.

Aug. 21, 1939: The Ashram was dedicated.

Lambert Memorial Cottage was blessed.

Oct. (St. Francis Day): Shanti was blessed for use.

July 1940: "Bethel" declared open by the Metropolitan of India, Burma and Ceylon

Dec. 19, 1940: The Ashram Chapel dedicated. Visit of Dr. T. Z. Koo to the Ashram.

Dec. 19, 1940: The Chapel Bell, the thank-offering gift of Mr. & Mrs. J. S. Lewis blessed for use at the Service.

Jan. 1941: 'Balusthan,' the gift of Mr. and Mrs. J. C Handy in memory of their son Balu, blessed by Rt. Rev. Bishop Mar Theodosius of the Bethany Ashram.

Aug. 1943: "Ebenezer" blessed for use.

21st Aug. 1943. Rev. Selvaretnam initiated as the first Sevak of the Ashram at a Special Service led by Dr. S. Jesudason of the Christu Kula Ashram, and assisted by Rev. S. Kulandran, Rev. J. T. Arulanandham and Rev. D. T. Niles.

June 16, 1944: The initiation of Mr. Yesusagayam as Sevaka Apedshakan.

April 4, 1945: Mr. Yesusagayam initiated as Prethama Sevak to act for Rev. S Selvaretnam.

### Claim to Hindu Temple

It is understood that Mr. Pararaja-Sinha Mudaliyar Segarajasingham of Sandilipay has filed action in the District Court of Jaffna for the recovery of the possession of Villundi Pillayar Temple and its temporalities. The claim is against Mr. Krishnar Vyramuttu, the present manager of the temple. The Urban Council of Jaffna is also made a party as the Council is said to have claimed an interest in the Crematorium. The plaint has been accepted and summons have been ordered on both the defendants returnable on May 29th.

### Killed by the Gold he Swallowed

The swallowing of over Rs 3,000 worth of gold to evade the Indo-Ceylon Customs resulted in the death of Ponnambalam Mylvaganam, a car driver of Jaffna. The man had returned from South India four or five days prior to his death. Dr. S. Ponniah who held the post-mortem examination produced at the Jaffna Magistrate's Court 32 pieces of smoothly made globoid gold the weight of which was about 32 tolas valued at Rs 3,000. The Coroner returned a verdict of death due to gangarene of the small intestines, caused by swallowing gold pieces.

### VE Day Celebration at Chundikuli

The C. D. C. Milk Centres at Chundikuli celebrated the Victory by feeding the children at the 3 centres of Chundikuli. The biggest crowd was at the St. John's Church Centre. Each child was given one bun, rice, cakes, and plantains. Several parents were present and Mr. Lewis Subramaniam spoke explaining the meaning of VE Day. Mr C. Ponnampalam, Chairman, U. C. and Mr. S. N. Nadarajah of Jaffna Apothecaries kindly contributed towards the cost of this feeding.

### Wedding

The marriage was solemnised at the Uduvil Church on Monday of Mr. G. J. Stephen, Manager, Rice Mill, Anuradhapura and Miss Freda Tennent, only daughter of the late Mr. Eliappah Tennent and Mrs. Tennent of Uduvil. Rev. G. D. Thomas officiated, A reception was held at the bride's residence.

### Personal

Miss Pushpam Hensman of Vincent Girls' High School, Batticaloa is taking an advanced course of studies in Dancing at Gopinath's School in Madras. She is a daughter of Mr. J. T. Hensman of Chavakachcheri and an Old Girl of Uduvil Girls' Eng. School.

—Dr. G. C. Mendis, Lecturer in History, University of Ceylon will be in Jaffna next week-end to lead a conference organised by the N. P. T. A. on the teaching of Ceylon History in the H. S. C. and University Entrance Classes.

### Obituary

The remains of Mr. Solomon Mather whose death occurred recently at the age of 66 were interred at the family burial ground, Manipay. The Revds. K. S. Jeyasingam, assisted by J. M. Singanayagam, J. V. J. Arnold and D. T. Niles officiated at the services held at his residence "Ratna Mahal" Manipay and the Revds K. S. Jeyasingam and B. C. D. Mather officiated at the grave side. The late Mr Mather leaves a widow, 4 children, and Mr. & Mrs. Julius Mather (son and daughter-in-law,) Dr. and Mrs. S. Saravanamuttu (daughter and son-in law) Mr. and Mrs. Edwin S. Samuel (daughter and son in-law.)

—The death occurred on the 7th inst at the age of 60 of Mr. B. N. Chelliah, retired Sanitary Inspector. The funeral service was conducted by Rev. Muthuvelu assisted by Rev. Somasundaram, Rev. J. T. Arulanandham and Rev. Cinniah. He leaves behind besides his wife and six children, two brothers, Mr. G S. Chelliah, Principal, Christian College, Kopay and Dr. C. Kanagasabai, M. O. H. Battota, two sisters, Mrs. N. S. Samuel and Mrs. T. S. Fry and an uncle Mr. V. A. Duraiappah.

**ENGAGEMENT**

DANIEL—LAWRENCE

The engagement is announced and marriage will take place shortly of **Mr. John Fredrick Nesaretnam Daniel**, *Sanitary Assistant* with **Miss Mary Maheswary Lawrence**, daughter of *Mr. and Mrs. J. [illegible] Lawrence*.

### THE NAZI DOOM

1. The War-boys cheer, the Joy-bells peal,
Sweet Freedom's banners wave!
The Odyssey that ends in weal
Proclaims the Britons brave!

2. Mad Feuhrer's ruthless blitzkrieg failed,
Earning eternal hate!
Though smaller States in weakness quailed,
Allies redeemed their fate!

3. The wingéd Lion with swelling ire,
Flew over Europe's skies;
Aloft he roared, oft spitting fire,
Amidst unnumbered sighs!

4. Vexed Axis legions stand aghast,
With leaders shelled or shot;
Allied guns boom the Victor's blast,
To seal the Nazi's lot.

5. The Eastern clouds are clearing fast—
Quake Japs in mortal fret;
Not long can cunning prowess last—
The Rising Sun must set!

6. Soften men's hearts, O Prince of Peace,
The wrath of greed restrain;
Cause hideous wars for ever cease,
Harmony reign again!

7. Let not strife strife for ever bring,
Strength aiding still the strong;
Let peaceful bells for ever ring,
Science toil not for wrong!

8. May nation with nation, creed with creed,
Unarmed, as comrades move;
May statesmen wise on goodwill feed,
And righteous brethren prove!

G. A. R.

**The J. N. E. S.**
**97th Annual Meeting**
UDUVIL CHURCH.
25-5-45 —— 10 A. M.
MORNING: Consecration Service and Communion.
*Preacher*: J. J. Ratnarajah, Esq. B. A., B. D.
AFTERNOON: Missionary Meeting.
*Speakers:*
Dr. G. D. Boaz
Rev. M. S. Adiseshiah, M. A., PH. D.
A. C. Thamby Rajah,
*Secretary.*

**Jaffna Inter-Collegiate Christian Fellowship**
**Teachers' Camp**
May 25—28.
*Leader:*
DR. MALCOLM ADISESHIAH,
(Professor of Economics, Christian College, Tambaram.)
*Please keep the dates free.*
16, 18 & 19

**Estate for Sale**
Estate in two adjoining lots, situated at Mirusuvil, next to the Govt. Dispensary and within two minutes walk of the Kandy Main road. Extent 30 acres. Planted mainly with coconut and partly with grafted mango and jak.
Apply early to:—
I. P. Thurairatnam,
Tellippalai.
18—2.

NORTHERN PROVINCE TEACHERS' PROVIDENT SOCIETY, LIMITED.
Special Concession to teachers over 30 years. Men under 40 and women under 35 can become members till 31st May, 1945.
"Awake, arise, or be for ever fall'n."
Further particulars or Application Forms can be obtained from:
S. P. Rasiah,
Hony. Secy., N. P. T. P. Society Ltd
Saras Anandha Giri, Vannarponnai.
13—8.

THE SHOP FOR THE BEST BOOKS
General and Regional Geography by *Unstead and Taylor.*
Geography of Ceylon by *E. K. Cook.*
Introduction to Tropical Botany by *M. J. Legog.*
Light and Sound by *Stewart.*
Heat, Light, Sound and Magnetism and Electricity by *Mackenzie.*
A Class Book of Physical Chemistry by *Lawry and Sagden.*
Introduction to organic Chemistry by *E. J. Holmyard.*
Higher Algebra by *Hall and Knight.*
Pitman's Shorthand New Era Edition.
THE C. L. S. BOOK SHOP,
First Cross Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச்சனங்களுக்கும் இகழ்ச்சி.

# புதினக் குறிப்புகள்

**யாழ்ப்பாணச் சுதேச சுவிசேஷ சங்கம்**

மேற்படி சங்கத்தின் இரண்டாம் பொதுக் காரியஸ்தர் கூட்டம் மே மாசம் 12 ம் தேதி பிற்பகல் 3 மணிக்குச் சங்கப் பொக்கிஷபதி திரு. E. J. ஜெயராஜாவின் இல்லத்திற் கூடியது.

எதிரே வரும் 20 ம திகதி ஓய்வுநாள் J. N E S. ஓய்வுநாளாக சகல சபைகளிலும் ஆசரிக்கப்படும்.

97 ம் வருடோற்சவம் இந்த மாசம் 25 ம் திகதி உடுவிலிலே கூடும்.

**அரசாங்கசபையில் வெற்றியைநினைத்தல்**

சென்ற 15 ம் திகதி அரசாங்க சபை கூடினபோது திரு. D. S சேனநாயக ஐக்கியசட்சியார் ஐரோப்பாவில் அடைந்த வெற்றியைப்பற்றிப் புகழ்ந்து பேசினர்.

**வரைதற்பகுதியிற் சித்திபெறல்**

ஆங்கில உபாத்திமாருக்கு நடத்தப்பட்ட வரைதற் சோதனையில், 1ம் 2ம் பாகத்திற் பின் குறிக்கப்படுபவர்கள் சித்தியடைந்திருக்கின்றனர். திருவாளர்கள் K சந்திரசேகரமும், S. சுந்தையாவும். இவர்களில் S சுந்தையா என்பவர் தெல்லிப்பழை Union கல்லூரி ஆசிரியர்.

**யுத்த முடிவுக்காக ஸ்தோத்திர ஆராதனை**

சென்ற 13 ம் திகதி காலை உடுவில் ஆலயத்திலே, ஐரோப்பாவில் யுத்தம் முடிந்து ஐக்கியசட்சியார் வெற்றியடைந்ததற்காக ஓர் ஸ்தோத்திர ஆராதனை வைக்கப்பட்டது.

**ஸ்ரீமதி ரஞ்ஜனா தங்கராஜா**

ஸ்ரீமதி ரஞ்ஜனா பரதநாட்டிய கலையில் அதி நிபுணத்துவம் பெற்றவர். இந்தியாவில் அதிகமாகப் புகழ்ப்பட்டவர். இலங்கையிலும் சிறிது காலத்தின் முன் வந்து நாட்டியஞ் செய்தவர். தற்போது கொழும்பிலுள்ள சகர மண்டபத்தில் பரதநாட்டியமும் அபிநயமுஞ் செய்யப்போகின்றார்.

**ஆட்கள்**

இலங்கை சர்வகலாசாலை இதிகாச ஆசிரியர் டக்டர் G. C. மென்டிஸ் என்பவர் வடமாகாண ஆசிரியர் சங்கத்தால் அடுத்த கிழமையில் நடத்தப்படும் சமாசத்தில் H S. C. வகுப்புக்கும், சர்வகலாசாலை பிரவேச வகுப்புக்கும் இலங்கைச் சரித்திரம் கற்பித்தல் என்பதைப்பற்றி உபந்நியாசம் நிகழ்த்துவர்.

**கள்ளச் சந்தைக்காரருக்கு மரண தண்டனை**

பிரான்சிலே முந்திய கொங்கிரெஸ் கல்வி மந்திரி Dr சேலிட்டிஸ்மட், பங்களாத்திலே நடந்த கொடூர பஞ்சத்தைப்பற்றிப் பேசுகையில், கள்ளச் சந்தைக்காரருக்கும், கொள்ளையடிக்கிறவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கவேண்டுமென்பதைப்பற்றி அக்கறையாய்ப் பேசியிருக்கின்றார். அக்கொடியருக்கு மரணதண்டனையே தகும்.

**விவாகம்**

சுன்னாகம் வாசரும தபால்நிலையத்தில் உத்தியோகம் வகித்து இளைப்பாறியிருப்பவருமாகிய திரு. V. S. சபையாவின் சிரேஷ்ட புத்திரனுக்கும், யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்தில் உத்தியோகத்தராயிருப்பவராகிய திரு. ஆசீர்வாதம் என்பவரின் சகோதரி ஸ்ரீமதி மேரி யோசேவினுக்கும் சிவில்முறைப்படி விவாகம் நிறைவேற்றப்பட்டது.

— மே மாசம் 14 ம் திகதி சோமவாரத்தன்று சாயரட்சை 5 மணிக்கு உடுவில ஆலயத்தில் ஓர் பரிசுத்த விவாகம் நிறைவேறியது. மணமகன் மட்டக்களப்பிலே அரசாட்சியாரின் Rice Mill முகாமைக்காரனாயிருக்கும் திரு. யோசேசு ஜெயரத்தினம் அதிவின்ஸ். மணமகள் காலஞ்சென்றுபோன Charles இளையப்பா தென்னன்த் என்பவரின் ஏக புத்திரி ஸ்ரீமதி விக்டோ தங்கபாக்கியம். கனம். S. T. ஆசீர்வாதம், கனம். V. B. முத்துவேலு என்னும் குருவர்களினுதவியோடு சபைக் குருவாக இருக்கும் கனம் G D. தொமஸ் போதகரால் விவாகச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. அதன்பின் மணமகள் இல்லத்தில் வந்தவர்களெல்லாரும் நன்றாய் உபசரிக்கப்பெற்றனர். அச்சமயத்தில் கனம். S. T. ஆசீர்வாதம், கனம். S. S செல்வரத்தினம் என்போர் சபையாரேபரித் தம்பதிகளுக்காசிகூறினர். தம்பதிகள் சாவபாக்கியம்பெற்று வாழ்க.

**யாழ்ப்பாணச் சுதேச சுவிசேஷ சங்கத்தின் 97 ம் வருடோற்சவம்**

(ஸ்தாபனம் 1848)

யாழ்ப்பாணச் சுதேச சுவிசேஷ சங்கத்தின் 97 வது வருடோற்சவம் 1945 ம் ஆண்டு மே மாசம் 25 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கமாக நடைபெறும்.

நிகழ்ச்சிகள்:

மு. ப. 10 மணி. கடவுள்வணக்கம்.
பிரசங்கம்: திரு J. J. இரத்தினராஜா.
பரிசுத்த இராப்போசனம்:
கனம். G. D. தொமஸ்
,, S. T. ஆசீர்வாதம்.

கருமக் கூட்டம் :
தலைவர் திரு Wm. பீனாக் J. P
பி. ப. 1 மணி. பகற்போசனம்
பி. ப. 2·30 மணி சுவிசேஷ கூட்டம்.
தலைவர்: கனம். G. D. தொமஸ்.
பேச்சாளர்கள்:

1. Dr. G. D. Boaz
சென்னைப் பல்கலைக் கழக மானதநூல் உபந்நியாசகர்.
2. கனம். M. S. ஆதிசேஷஐயர்.
சென்னைக் கிறிஸ்த கல்லூரி உபந்நியாசகர்.

**நுணுவிற் சபை**

ஆனைக்கோட்டைச் சபையில் உபதேசிகராக ஊழியஞ் செய்துகொண்டுவந்த திரு. S. N சின்னத்தம்பி என்பவர் பசுமலையிலுள்ள ஐக்கிய வேத சாஸ்திரக் கலாசாலையில் சென்ற இரண்டு வருடங்களாக வேத சாஸ்திரங் கற்று முடித்து, கலாசாலையின் தராதரப் பத்திரமும் பெற்றுத் திரும்பிவந்து, தற்போது நுணுவிற் சபையின் ஊழியனாகச் சபாசங்கத்தால் நியமனம் பெற்று, இந்த மாசமுதல் சபைப்பொறுப்பேற்று, அவ்விடத்தில் ஊழியத்தை ஆரம்பித்திருக்கின்றார்.

அவரது மனைவியும் அவருக்குதவியாக இருக்கக்கூடிய சிற்சில பயிற்சிகளையடைந்திருக்கிறார். சபாநாதர் தாமே அவர்கள் ஊழியத்தை ஆசீர்வதிப்பாராக.

**மரணம்**

சுகாதாரப் பரிசோதகராயிருந்து இளைப்பாறியிருந்த திரு B. N. செல்லையா என்பவர் இந்த மாதம் 7ந் திகதி தேகவியோகமாயினர். இவர் மரிக்கும்போது வயது 50. பிரேத பசம ஆராதனை கனம். முத்துவேலுப் போதகரால் கனம். S. சோமசுந்தரம், கனம். J. T. அருளானந்தம், கனம். M S. சின்னையா போதகர்மாரின் உதவியுடன் நடத்தப்பட்டது.

**சடுதி மரணம்**

சென்ற 6 ம் திகதி இந்தியாவிலிருந்து திரும்பிவந்த வண்ணார்பண்ணை வாசியாகிய பொ. மயில்வாகனம் என்னும் 30 வயதுள்ள வாலிபன் சடுதி மரணத்துக்குள்ளானர். அவருடைய பிரேதம் சோதிக்கப்பட்டபோது, அவருடைய குடலிலே 3000 ரூபா பெறுமதியான 32 பவுண் கட்டிகள் காணப்பட்டனவென்றும் அப்பொன்கட்டிகள் காரணமாக உண்டான வயிற்றுவலியே அவருக்குச் சடுதி மரணத்தை யுண்டாக்கியதென்றும் அறியக்கிடக்கின்றது. 32 பொன் கட்டிகளோ, ஒரு மனித ஜீவனோ, எது பெரிது?

**ஓர் நேர்சின் மரணம்**

கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரியிலே Nurse ஆகவிருந்த 28 வயதுள்ள Miss Rene Von Hagbt என்பவள் இரசக்குளிகைகளை அதிகமாக விழுங்கினதினால் மரணமடைந்தனள்.

**யுத்த புதினம்**

21 வது விமானப் படை 500 Super Forts என்னும் விமானங்களைக்கொண்டு யப்பானிய கைத்தொழிற் சாலையுள்ள நாகோயா என்னும் பட்டணத்தை வறுவாய்த்தாக்கின. நாகோயா தோக்கியோவிலிருந்து 170 மைல் தூரத்திலிருக்கின்றது.

—ஒகினவா என்ற இடத்திலே அமெரிக்க சேனையின் முன்னேற்றத்தைத் தடுக்கும்படி யாப்பானியர் அதிக பெலமாய் முயற்சித்தும் அது கூடாமற்போயிற்று.

—பாமோசாவுக்கு அணித்தாயுள்ள ஊச்சௌ என்ற இடத்தைச் சீனா கைப்பற்றிக்கொண்டனர். இது ஐக்கிய கட்சியார் சிறுவிமானங்கு வதற்கு அதிக வசதியாவதினால், ஊச்சௌவைச் சீனர் பிடித்தது அதிக வாய்ப்பானது.

—நாலு வாட்களுக்குள்ளே 10 லட்சத்தார்க்கு மேல் [illegible] பட்ட சேனைபதிகளும் பிடிக்கப்பட்டனர்.

**இரண்டாம் உலக யுத்த விசேஷ சம்பவ அட்டவணை**

1939 ம் ஆண்டு செப்டெம்பர் 1 ம் உ போலாந்து முற்றிக்கையிடப்படல்.
,, செப். 2. பிரித்தானியும் பிரான்சும் ஜர்மனியுடன் யுத்தந் தொடுத்தல்.
1940 ஏப். 9 ஜர்மனி டென்மார்க்கையும் நோர்வேயையும் முற்றிக்கையிட்டுக் கைப்பற்றல்.
,, மே மாசம் 10 ஐக்கியகட்சி நோர்வேயிற் தோல்வியுறல் சேம்பர்லேன் மந்திரித்துவம் ராஜிநாமா செய்தல். உவின்ஸ்டன் சேர்ச்சில் மந்திரியாதல்.
,, ஜர்மனி பெல்ஜியத்தையும் ஒல்லாந்தையும் முற்றிக்கையிடல்.
மே மாசம் 14 ஒல்லாந்து ஜர்மனிக்குக் கீழமைதல்.
மே 20 பெல்ஜியம் பிடிபடல்.
ஜூன் 3 டன்கேர்க் விடப்படல். ஐக்கியகட்சியார் நோர்வேயைவிடல். இத்தாலி பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் எதிராக யுத்தந்தொடுத்தல்.
ஜூன் 14 ஜர்மனியர் பாரிஸ்நகருக்குட் புகுதல்.
ஜூன் 22 ஜர்மனியின் விமானத்தாக்குப் பிரிட்டன்மீது.
1941 ஏப்பிறில் 6 ஜர்மனி யூகோசிலாவியாவையும் கிரேக்கையையும் முற்றிக்கையிடல்.
ஏப்பிறில் 23 கிரேக்குதேசம் பிடிபடல்.
,, ஜூன் 22 ஜர்மனி ருஷியாவைச் சருவல்.
ஜூலை 12 பிரிட்டனும் ருஷியாவும் பொருத்தஞ்செய்தல்.
ஆகஸ்ற் 15 அட்லாந்திக் சாட்டர் உறுதிப்படல்.
டிசெம்பர் 7 Pearl துறையில் அமெரிக்கக்கப்பற்படையை ஜப்பான் சருவல்.
1942 ஜனுவரி 1 மனில்லா விழுகை.
பெப்புறுவரி 15 சிங்கப்பூர் விழுகை
மார்ச். 14 றங்கூன் விடுபடல்
மே 1 ஜப்பானியர் மண்டலாவைப் பிடித்தல்.
மே 7 லிபியாவை ஜர்மன் சருவல்.
ஒக்ரோபர் 23 எல்அலாமேல் யுத்தம்.
நவம்பர் 7 ஐக்கிய கட்சியார் பிரான்சிய வட ஆபிரிக்காவில் இறங்கல்.
1943 பெப்புறுவரி 3. ஸ்ராலின்கிறாட்டில் ஜர்மன் 6 வது சேனை நாசமாதல்.
ஜூலை 10 சிசிலி முற்றிக்கையிடப்படல்
ஜூலை 5 முசோலினி நீங்குதல்
ஆகஸ்ற் 7 சிசிலி பிடிபடல்
செப்டெம்பர் 3 ஐக்கிய கட்சியார் இத்தாலியில் இறங்கல்.
,, ஒக்ரோபர் 13 இத்தாலி ஜர்மனிமீது யுத்தந்தொடுத்தல்.
டிசெம்பர் 3. மூன்று பெரியார் தெஹிரானில் கூடுதல்.
1944 ஜூன் 3 ரோமை நகரம் பிடிபடல்.
ஜூன் 6 நோர்மண்டி முற்றிக்கை விடப்படல்.
ஜூன் 14 முதன்முதல் பிரித்தானியாமீது பறக்கும் குண்டுப்பிரயோகம்.
ஜூன் 20 ஹிட்லரைக் கொல்ல எத்தனித்தல்.
முசோலினி பிடிபடல்
ஏப்பிறில் 29 முசோலினி கொல்லப்படல்.
ஹிம்லர் சமாதானம் கோருதல்.
மே மாசம் 1 ஹிட்லர் மரித்துவிட்டாரெனச் செய்தி பரம்புதல்.
டோனனிற்ஸ் அதிகாரியாதல்.
மே 2 கோபெல்ஸ் தற்கொலை செய்தாரெனச் செய்தி பரம்புதல்.
பேர்ளின் பிடிபட்டதென ஸ்ராலின் அறிவித்தல். வட இத்தாலியிலும் அவுஸ்திரேலியாவிலும் ஜர்மன் சேனை அலெக்சாந்தரிடம் சரண் புகுதல்.
மே 3 ஐக்கியகட்சியார் இறங்கூனைப் பிடித்தல்.
மே 4 ஒல்லாந்து முதலிய இடங்களில் சரண்புகுதல்.
மே 7 ஜர்மனி முழுவதாய் நிபந்தனையின்றிச் சரண்புகல்.
யுத்த முடிவு.
மே 8 VE-Day இப்பற்றிப் பிரித்தானிய பிரதம மந்திரி பிரசித்தஞ் செய்தல்.
ஆகஸ்ற் 22 பாரிஸ் நகரம் விடுதலையாதல்.
ஒக்ரோபர் 5 ஐக்கியகட்சியார் கிரேக்கு தேசத்திலிறங்குதல்.
ஒக்ரோபர் 15 பிரித்தானியர் அத்தேனையைக் கைப்பற்றல்.
1945 ஜனுவரி மக்காதர் லூஜன் தீவிலிறங்கல்.
ஜனுவரி 17 ருஷியர் உவார்சோவைக் கைப்பற்றல்.
பெப்புறுவரி 6 கிறிமியா ஆலோசனைச் சங்கம்.
ஏப்பிறில் 13 றூசிவெல்ற் மரணம்.
,, 25 ருஷியர் பீச்ஸ்ரூசுகிற் கொடியேற்றல்.
சன்பிரான்சிஸ்கோ ஆலோசனைக் கூட்டம்.
ஏப்பிறில் 27 ஹிட்லர் கோயறிங்கை நிற்பாட்டல்.


**வடமாகாண**
**ஆசியர் சகாயநிதிச் சங்கம், லிமிட்டெட்**

**முப்பது வயசுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**
40 வயசிற்குட்பட்ட ஆண்களும்,
35 வயசிற்குட்பட்ட பெண்களும்,
**1945 - ம் ஆண்டு மேமூ 31 - ந் தேதி வரையின்**
**ஆசிரிய சகாயநிதிச் சங்கத்தில் சேரலாம்.**
அரிய தருணத்தை உபயோகித்துக் கொள்ளுங்கள் பின் கவலைப்படாதீர்.
வேறு தேவையான விவரங்களும், விண்ணப்பப் பத்திரமும் கௌரவ காரியதரிசியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

S. P துரையா,
கௌரவ காரியதரிசி,
வ. ஆ. ச சங்கம், லிமிடெட்.
சரஸ்வதனகிரி, வண்ணார்பண்ணை

13 — 20.



**70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம் ...**



1872ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் சேர்ப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அது செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து மட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனால் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

**ஹம்பர்**

**மில்லர்ஸ் லிமிடெட், ஹம்பர் துவிச்சக்கரவஜண்டுகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கணுந் தீமையருகுக
பாசநீக்கிப் பவித்திரமேயருள்
யேசு நாமமே என்றென்று மோங்கவே

உதயதாரகை

1945 ம் ஞு மேமீ 18உ

## "நமக்கு முன்னிருக்கும் பாரித்த வேலை"

## Forget not the Task ahead.

ஐரோப்பாவில் யுத்தம் முடிவுற்றது. ஜர்மனி ஐக்கிய கட்சியாரிடஞ் சரணாகதி யடைந்துவிட்டது. இந்த முடிவினால் சனங்களுக்குள் உண்டாயிருக்கும் ஆறுதலுக்குஞ் சந்தோஷத்துக்கு மறிகுறியாக ஆலயத்தின் மணிகளெல்லாங் கிண் கிணென முழங்கி ஆர்ப்பரித்தன. ஆங்காங்குங் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இந்தச் சந்தோஷ செய்தி கேள்விப்பட்டவுடன் ஜனங்கள் எல்லாம், வல்ல சாட்சாத கடவுளைப் போற்றித் துதித்தனர். ஆனாலும் இன்னுந் தங்களுக்கு முன்னிருக்கும் பாரித்த வேலையை அவர்கள் மறக்கவேயில்லை. வெற்றிநாளன்று பிரித்தானிய சாம்பிராச்சியத்தின் அரசர் பெருமான் தமது இராச்சியத்தின் பிரஜைகளுக்கெல்லாம் ஒலிபரப்பி மூலமாகத் தமது செய்தியை அனுப்பியபோது, "எங்களுக்குக் கிடைத்திருக்கும் இந்த விடுதலைக்காக நாம் கடவுளைத் துதிக்கின்றோம். இதில் நீவிருஞ் சேரும்படி உங்களைக் கேட்கின்றேன். முழு ஐரோப்பாவையும் யுத்தத்துக்கிழுத்த ஜர்மனியரைக் கடைசியாய்த் தோற்கடித்துவிட்டோம். இனிக் கிழக்கிலே இன்னும் புரியவேண்டிய யுத்த மிருக்கின்றது. யப்பானோடு செய்ய வேண்டிய யுத்தம் மகா உக்கிரமானது" எனச் சொல்லி யிருக்கின்றார்.

ஆசியாவில் நடத்தப்படவேண்டிய யுத்தத்தைப்பற்றி, அரசர்பிரான் மாத்திரமல்ல, காத்திரமான எச்சரிப்புடன் அந்த கனத்துக்குரிய பிரித்தானிய பிரதம மந்திரி உவின்ஸ்றன் சேர்ச்சில் பேசியபோது: "இப்போது நாம் நமது முழுப்பலத்தையுந் திரட்டி நமது வேலையைச் செய்து முடிக்க வேண்டும். பிரித்தானியாவே எழுந்து முன்னேறிப் போ; சுவாதீனம் நிலைப்படுவதாக, இராசா வாழ்க", எனப் பேசியிருக்கின்றார். அமெரிக்க பிரசாதிபதியாகிய ஹரி ரூமன்: "எங்களுக்கு முன்னிருக்கு முத்தரவாதத்தை யுணர்ந்து, முயற்சித்து யுத்தத்தை முற்றுக்குக் கொண்டுவருவோம். தற்போது நமது வெற்றி அரைவாசிதான். மேற்குப்பக்கம் வெற்றியாய் விட்டது. ஆனால் கிழக்கிலேயுள்ளவர்கள், இன்னும் துரோகியாகிய யாப்பானியருக்கு அடிமையா யிருக்கின்றனர். நாம் செய்யவேண்டிய வேலை மகா அவசியம், ஒருவனும் தனது கடமையில் குறையாதிருப்பானாக," என்று சொல்லியிருக்கின்றார்.

மார்ஷல் ஷியாங்கைஷேக் ஒலிபரப்பிமூலம் பேசியபோது: "ரூசிவெல்ற் பிரசாதிபதி இந்த வெற்றியைக் காணாது மரித்தது நமக்கு நிரம்பிய துக்கம். ஆனால் அவர் மரித்துப்போனாலும் அவரது முகத்தரமான எண்ணங்களெல்லாம் ஐக்கிய கட்சியார் இன்னும் முடிக்கவேண்டிய வேலையை முடித்துத் தங்கள உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கு அதிக ஏவுதலா யிருக்குமென்பது நிசமே. மனுஷவர்க்கத்தின் பாரமெல்லாம் யப்பான்மேற் பொறுக்கின்றது. இது விஷயத்திற் சீனராகிய நாம் செய்யவேண்டிய பாகத்தையும் பொறுப்படையுஞ் செய்து நிறைவேற்றுவதற்கு அவர்களுக்காக நான் உத்தரவாதியாய் நிற்கின்றேன்." என்பது.

பிரித்தானியர், அமெரிக்கர், சீனர், ருஷியர் ஆகிய ஐக்கிய கட்சியைச் சேர்ந்த யாவருங் கீழ் ஆசியாவிலே சிக்கிரஞ் செய்து முடிக்கவேண்டிய வேலையின் பாரதூரமான தன்மையைப்பற்றி உணர்ந்திருக்கின்றனர். யாப்பானும் ஜர்மனியைப் போல, நிபந்தனை யாதுமின்றி ஐக்கிய கட்சியாரிடஞ் சரண் புகும் வரை யுத்தம் நடைபெறவேண்டியதே.

## யுத்த நிறுத்தம்

( ச. பே. முத்தையா )

"சண்டை சமாதானமாம் தம்பி! மெய்தானோ" என்று கேட்டுக்கொண்டு வந்த எங்கள் அயல்வீட்டுப் பாட்டி "யறுமன்காரன் இங்கிலிசின்ரை மைச்சானும் தம்பி! ஒண்டுக்கை யொண்டா யிருந்துகொண்டு இவன்கள் ஏன் இப்படி மயிர்பிடிபட்டவங்கள்" என்று ஆரம்பித்து அநேக வினாக்களை வினவத் தொடங்கினாள், இனி தங்கப்பவுண் 13 ரூபாவிற்குமோ? காரிக்கன் சீலை மூளம் நாலு பணத்துக்கு வாங்கலாமோ? அரிசிக் கொப்பன் புத்தகம் போய்த் தொலையுமோ? நப்பர்த தேசையும் பட்டாளமெல்லாநியும் எப்ப தொலையும்? சோறு வயிறு நிரம்பத் தின்னலாமோ? என்று பல வினாக்களைப் போட்டாள் பாட்டி. இவ்வினாக்கட்கு என்னால் இயன்றவரை பதில் கூற முயற்சித்தேன். பாட்டி திருப்தியடையவில்லை. இந்த உலக கலக்கங்கட்கெல்லாம் நான்தான் காரணமென்பதுபோல என்னை ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டு வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு போய்விட்டாள் பாட்டி.

யுத்தம் முடிந்ததென்ற செய்தி கேட்டவுடன் ஏழைகள் கிராமவாசிகளின் மனம் வயிற்றுச் சோற்றிலும் சேலையிலும் செல்கின்றது. ஒரு இறாத்தல் பூடு பன்னிரண்டு ரூபா, ஒருபடி உழுந்து நாலரை ரூபா, ஒரு இறாத்தல் மிளகு இரண்டரை ரூபா, ஒருபடி அரிசி மூன்றுரூபா என்று இவ்விதமாக இருட்டுச் சந்தையில் தனித்த புயல் அடித்து "தவசக்கை"களான தயாளமுள்ள தனவான்களாகிய வியாபாரிகளின் மனம் யுத்த நிறுத்தத்தைக் கேட்டு எப்படியிருக்குமென இறைவனே அறிவார். "இனி நாம் தெருச் சந்திகளிலும், றோட்டு மதவுகளிலும் இருந்து இராப்பகல் பொழுது போக்கி அலைந்துலைந்து பழையபடி சோற்றுக்குத் தாளம்போடும் நிலையில் நாம் தவிக்க வேண்டி வருமே" என பட்டாளத்திலும், அவசர கந்தோர்களிலும் வேலை பார்க்கும் நமரினரும் கவலையடைய இடமுண்டல்லவா? பட்டாளத்தில் கிடுகு கொந்தறாத்து இறைச்சிக் கொந்தறாத்து என்றெல்லாம் தலையிட்டு பணம் குவித்தோராக்கும் இந்த யுத்த நிறுத்த செய்தி திகைப்பைக் கொடுக்குமென்கின்றார் ஒருவர். யுத்த அலவன்ஸ் இனி நின்றுவிடுமோ? என்று ஒரு ஆங்கில ஆசிரியர் அங்கலாய்க்கிறார். யுத்தத்தில் வெற்றி யெடுத்ததல்ல சமாதானத்தில் வெற்றி யெடுப்பதே கஷ்டமானது என்கிறது ஒரு பத்திரிகை. யுத்தம் நின்றுவிட்டது, சமாதானத்தை எப்படி வளர்ப்பது? என சான்பிரான்சிஸ்கோ நகரில் தேசத் தலைவர்களும் அரசியல் நிபுணர்களும் கூடிப்பேசி தேசங்கட்குள்ளே பரஸ்பர நல்லெண்ணத்தை யுண்டாக்க தலையைப்போட் டுடைக்கிறார்கள். இதற்குள்ளே சிவபூசையில் கரடி வந்தது போலவும் "போலந்து பிரச்சனை." "இந்திய சுயராச்சியப் பிரச்சனை" என்பன புகுந்து மகா சாட்டை [illegible] கூழ்க்கின்றன [illegible] தம் என்னென்ன விதமான அசைவுகளை யுண்டாக்கியிருக்கின்றது பாருங்கள்!

"பாலுக்குச் சர்க்கரை இல்லை என்
பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப்போட உப்பில்லை என்
பார்க்கும் குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லை
என்பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லையென்
பார்க்கும் விசனமொன்றே."

என்பதுபோல அரசியல் தலைவர்கள் தொடங்கி அயல்வீட்டுப் பாட்டி வரையும் உள்ள யாவருக்கும் பல பல விதமான அங்கலாய்ப்புகளும் ஐயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான அங்கலாய்ப்பு!

கிறிஸ்துவின் அடியாராகிய நாம் சமாதானத்துக்காக சுமார் ஐந்தரை வருடமாக இறைவனை நோக்கி வேண்டுதல் செய்தோம். இதோ வேண்டுதல் கேட்கப்பட்டது. யாப்பானும் கூடிய விரைவில் அடக்கப்பட்டுவிடுமாதலால் பூரண வெற்றி என்று தயங்காமல் கூறலாம். இன்னும் பல வருடங்கட்கு ஒரு கிறிஸ்தவ அரசாங்கத்தின்கீழ் வாழும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவில வைக்கும் நம்பிக்கையை ஒரு அரசாங்கத்தில் ஒரு சில உத்தியோகத்தரில் வைப்பது ஆபத்தானது. இந்தியாவுக்கு சுயராச்சியம் கொடுத்தால் சுயராச்சியம் பெற்ற இந்துக்கள் கிறிஸ்தவர்களை உபத்திரப்படுத்துவார்களாதலால் கிறிஸ்தவ சிறுபான்மையாரின் பாதுகாப்புக்காக அரசாங்கத்தை இந்துக்கள் கையில் கொடுப்பது புத்தியல்ல என்று இந்தியாவில் கூறப்பட்டது. நமது கௌரவ கல்வி மந்திரியார் கிறிஸ்தவ சாகியத்துக்கு எதிரானவர் என்றும் ஒரு கூக்குரல் இடையிடை கேட்கின்றது. கிறிஸ்து வல்லமையுள்ளவர். ஒன்றுமில்லாமையிலிருந்து யாவற்றையுமுண்டாக்குகிறவர். தம்முடைய மக்களுக்காக வெண்கல விலங்கையும் வளைத்துக் கொடுக்கிறவர். அவாந்தர வெளியிலே நீரூற்றுகளை யுண்டாக்குகிறவர் என்று நாம் நமது இறைவனை விசுவாசிக்கிறோம். ஆனால் இந்த கிறிஸ்து சுயராச்சியம் பெற்ற இந்துக்களிலும் நமது கல்வி மந்திரியிலும் பார்க்க வல்லமை கூடியவரென்பதை மாத்திரம் ஒத்துக்கொள்ள மனம் உடன்படுகிறதில்லை. இதனால் உயர்ந்த அதிகாரங்களை, அரசாங்கங்களை நமது கிறிஸ்தவ சபைகளின் பாதுகாப்பு இடங்களாக (Shelter) நம்பி அவைகளைத் தேடத் தொடங்குகின்றோம். ஒரு அரசாங்கத்தின் சலுகையை நாடும் திருச்சபை ஆவியில முன்னேறுவதில்லை என்பது திருச்சபையின் இரண்டாயிர வருட சரித்திரத்தில் அநேக முறை காணலாம். ஒரு உதாரணம்:— நீரோ அரசன்காலத்தின் பரிசுத்தவான்களினது ஜெப கோஷத்தை கொன்ஸ்டன்டைன் என்ற அரசன்காலத்தில் நாம் காணவில்லை. ஏன்? நீரோ அரசன் காலத்தில திருச்சபை கொதிக்கிற எண்ணெய்க்குள் போடப்பட்டது. கி. பி. 4ம் நூற்றாண்டில் கொன்ஸ்டன்டைன் காலத்தில் அதே திருச்சபை இளந்தென்றலுலாவும் வளம்பெற்ற அரண்மனையில் வைக்கப்பட்டிருந்தது. மாமசமானதைத் தான புயபலமாக்கிக்கொண்டவன் சபிக்கப்பட்டவன் என்று வேதம் கூறுகிறது. நமது யுத்தகாலத்தின் பயங்கரம் யாவுந் தீர்ந்து உணவு, உடை, பவுடர், சவர்க்காரம், அத்தர் கைக்குட்டைகள் மலிவாக வாங்கக்கூடிய காலத்துக்குள் நாம் இன்னும் அடி வைக்கவில்லையெனினும் கூடிய விரைவில் சலவேராம் என்ற நம்பிக்கையுண்டு. இந்தச் சலாக்கியங்களுடன், மேனாட்டு நகைகள் மேனாட்டு உடை உணவு முதலிய அந்நியநாட்டுச் சரக்குகள் [illegible]மாக (அதாவது [illegible]விலையில சிறந்த முறையில) கப்பல் கப்பலாக வந்து இறங்கும். சுதேச உணர்ச்சி என்ற மங்கி பெரிதிற திரியை மேனாட்டு நாகரீகம் என்ற பிரசண்டமாருதம் அதி வேகமாக வீசி அணைக்கக்கூடும். சென்ற கால்நூற்றாண்டுக்குள் நமது கிறிஸ்தவ சபைகளில் 3 உண்டாயிருந்த தமிழ் உணர்ச்சி. (சுயபாஷை யுணர்ச்சி) கீழ்நாட்டு பழக்க வழக்க உணர்ச்சி முதலிய நமது முதுசொமான பரிசுத்த உணர்வுகளை கைவிடும்படியாக இந்த மேனாட்டு பகட்டு நம்மை வழி நடத்திற்று. சென்ற சில ஆண்டுகளாக சுதேச உணர்ச்சி மெல்ல மெல்ல துளிர் கொள்ளுகின்றது. வெற்றி வேகத்தோடு இனிமேல் நமது சபைகளை மறுபடியும் 'இமிட்டேசன்' நாகரீகத்தில் விழுத்தும்படி இந்த மேனாட்டு நாகரீகம் வரும் என எதிர்பார்க்கலாம். இதற்கு நாம் கவனமாக இராவிட்டால் நமது தேசக் கட்சியார் பாடுபட்டுவிட்ட வெற்றி யாவருக்கும் வெற்றியாக நமது சுதேச சபைகட்கு தோல்வியாக முடியக்கூடும். ஏனெனில் அந்நிய பாஷையில், அந்நிய உடையில், அந்நிய பழக்கவழக்கங்களில், அந்நிய கலையில், அந்நிய நாகரீகத்தில் "தியாகியாக வாழ முடியவே முடியாது. தியாகமே கிறிஸ்தவனின் அத்திவாரம். "மேனாட்டு நாகரீகத்தில் அமிழ்ந்தி, சடைநாய் வளர்த்து பழிகது வீட்டில் வாழும் ஒரு தேவ ஊழியனுடைய வெளிப்படலையைத் திறக்கவும் என் கை நடுங்குகின்றது. ஒரு சாதாரண கூரைவீட்டில் வாழும் தேவ ஊழியனுடைய படுக்கையறைக்கும் தாராளமாகப் போயிருக்கிறேன்." என்று ஒருவர் கூறினார். இதின் உண்மையை வாசகர்கள் ஆராய்வார்களாக. ஆகையால் மேனாட்டு நாகரீகம் நமது நாட்டுச் சபைகளின் வளர்ச்சியைத் தடுக்குமென்பது நமதபிப்பிராயம். இந்த நாகரீகம் முன்னையிலும் கூடிய வேகத்தோடு நமது சபைகளைத் தாக்க இனிமேல் வரும் என்றும் இதனை ஏற்றுக்கொள்ளாமல் சுதேச உணர்ச்சியை வளர்க்கப் பாடுபட வேண்டுமென்பதும் நமது வேண்டுகோள்! அரசாங்கத்திடம் சலுகை பெற்றும் சபையை வளர்க்க முயற்சிப்பது சபை வளர்ச்சிக்கு ஆபத்தானது என்பது நமது எச்சரிக்கை!! கிறிஸ்தவர்கள் தமிழிலக்கியங்கள் கற்க வேண்டுமென்பதும், உடையிலும், பாஷையிலும் தமிழுணர்ச்சி பெற்று வாழ வேண்டுமென்பதும் நமது விருப்பம்!!! இந்த யுத்த நிறுத்தமும் சமாதான முயற்சியும் நமது வெளிக்க உலகில் ஆனந்தத்தையுண்டாக்கி யிருப்பதுபோல ஆத்மீக உலகிலும் வெற்றியையும் நற்செய்தியையும் இருக்க வேண்டுமென்பது நமது பிரார்த்தனை!!!

" அங்கிலோ தேசத்துள்ள
அரும்புருஷார்த்தங் கொள்ளார்
பொங்கு டாம்பீகம் வன்கண்
பொருவீட்டு தந்திரங்கள்
வெங்குடி கேடென்றுய
விநாசத்தை விலைபாவிட்டி
சங்கடம் பகரும் மாயச்
சந்தையின் அமலைத்தெங்கும்"

என்று புலவர் பெருமான் கிருஷ்ண பிள்ளை அவர்கள் மாயாபுரிச் சந்தையின் நிலையை மேற்காட்டிய செய்யுளில் விபரிக்கிறார். (யாத்திரீகம். மாயாபுரிப்படலம் 75 ம் செய்யுள்) மேனாட்டு நகரீகத்தை விலைக்கு வாங்கும்போது அங்குள்ள நல்ல சரக்குகளை விட்டுவிட்டு டாம்பீகம், வன்கண், வியாபார தந்திரம், குடிவெறி, துர்க்குணம், என்ற இந்த ஐந்து சரக்குகளையும் மாயாபுரிவாசிகள் விலைக்கு வாங்கி மேல்விலைக்கு விற்கிறார்கள். இந்தச் சந்தையை மோட்ச பிரயாணிகள் கேட்டார்கள்" என்பது இச் செய்யுளின் பொழிப்பு. இக் கட்டுரைக்கு மிகவும் பொருத்தமான இச் செய்யுளோடு நமது 'யுத்த நிறுத்த'த்தை நிறுத்திக்கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, May 18, 1945.

## THE POET OF INDIAN FREEDOM

Last week was celebrated the birthday of India's greatest poet-philosopher, Rabindranath Tagore. The VE Day announcement following as it did almost in the wake of the birthday celebrations, was a happy coincidence indeed, for it is but fitting that the mortal duel with Fascism's dark forces should end almost on the eve of the birthday of one whose humanitarianism and love for his oppressed and down-trodden countrymen tower above all his other achievements. Had he lived to see the day, no one would have felt gladder than he on hearing the doom of the squad plans of Hitlerite robbers who sought to fetter the peoples of the world in eternal chains of social inequality, hunger and death.

Freedom to Rabindranath Tagore meant much more than political freedom. It meant freedom from grinding poverty and inhuman social customs. As the singer and prophet of India's new nationalism, he strove to put into the tongues of the ignorant masses the language of protest and grim purpose. He tried to fulfil his dreams in his Shantiniketan and Srineketan, the two sister institutions where he had sown the seed of a "healthier, simpler and humaner life, self-reliant but unaggressive, rooted in honest labour but disdaining to exploit the labour of others, unafraid because knowledge illuminated the path and wisdom guided the journey." Today these twin dreams of Rabindranath have become patterns of constructive nationalism in India.

As we stand today on the threshold of a new era and as the leaders of the nations are busy with the task of making out of this multiple world a single Society guaranteeing peace, justice and equal opportunity for all nations, it is worthwhile to recall the historic birthday message of Rabindranath Tagore on the completion of his eightieth year. Incidentally it may be mentioned that this was his swan song too: "As I look around I see the crumbling ruins of a proud civilisation strewn like a vast heap of futility. And yet I shall not commit the grievous sins of losing faith in Man. I would rather look forward to the opening of a new chapter in his history. After this cataclysm is over and the atmosphere rendered clean with the spirit of service and sacrifice, a day will come when unvanquished man will retrace his path of conquest despite all barriers to win back his lost human heritage".

Rabindranath Tagore never lost faith in the essential goodness of man. The cardinal faith of his life was universal brotherhood, the faith on which he lived, the faith that was the guiding spirit of his life. The loss of "human heritage" is War's inevitable and tragic liability and it is only by the redemption of this human heritage that the civilisation that has been shattered can be restored and preserved against future outrage.

## GERMANY MEETS THE INEVITABLE END.

*[ Thomas Mann, the great German author, a Nobel Prize winner in Literature, was one of the German intellectuals who clearly saw in the rise of Hitler to power the ruin that has now overtaken the German nation. Holding such anti-Nazi views, Mann could not remain in his country and he therefore went abroad.*

*Never did he lose an opportunity to tell the world that Hitlerism was bound to fail involving the German nation in utter disaster. Even when Hitler was within an ace of victory, Thomas Mann did not lose his faith in Democracy's ultimate triumph.*

*The following article by Thomas Mann will therefore be read with intense interest and conviction.]*

The destiny of the most repulsive monster of our era, National Socialism, has been fulfilled—a destiny appropriate to its character, a destiny that from the start was graven on its forehead, visible to every seeing eye, a destiny whose fulfilment was always only a question of time. If its agony were only its own and not at the same time that of a great and unfortunate nation that is now suffering for its credulity, its seductibility and besottedness, its lack of political judgment, we could view the catastrophe with greater equanimity with a colder sense of satisfaction for that which is right, just, and necessary.

It is impossible to demand of the abused nations of Europe of the world, that they shall draw a neat dividing line between 'Nazism' and the German people. If there is such a thing as a Germany as an historical entity, then there is also such a thing as responsibility,—quite independent of the precarious concept of 'guilt.' The world has gone through five years of a war full of suffering and sacrifice, a war unleashed by Germany; and from the very first day of this war Germany's opponents were faced by the combined German ingenuity, courage, intelligence, discipline, military efficiency- in short, by the whole power of the German nation which stood as such behind the regime and fought its battles. They were not faced by Hitler and Himmler who would be nothing at all if the strength and blind loyalty of German manhood were not fighting and dying with misguided valour for these criminals to this very day.

### Damned from the Start

No one can deny that the national awakening of 1933 of this delirium that carried the seeds of war in it, possessed the uncanny power of a genuine revolution. But hopelessness and damnation were written on its features, "Great revolutions," I wrote in my diary at that time, "usually attract the sympathy and admiration of the world by their bloody and passionate generosity. That was true of the Russian revolution as well as of the French, which deeply moved all thinking and feeling intellects in the world.

"What is there about this 'German' revolution that isolates the country and breeds only uncomprehending loathing roundabout? It boasts of its bloodlessness and yet it is the most vindictive and bloodthirsty that ever was. Its basic character, no matter what one may imagine, is not exaltation, joy, nobility, love, which might always be connected with great blood sacrifices to faith and to the future of mankind—but hatred, resentment, vengeance, baseness. It could be much bloodier and the world would still admire it, if it were at the same time finer, brighter, nobler.

It was left for the Germans to bring about a revolution of a character never seen before: a revolution without ideas, opposed to ideas, to everything higher, better, decent; opposed to liberty, truth and justice. Nothing like it has ever occurred in human history. And all this is accompanied by tremendous rejoicing of the masses who believe they have accomplished their intent, while, in reality, they have only been deceived by mad cunning, a fact which as yet they do not dare admit to themselves. And behind it all lies the absolute certainty on the part of the better people that everything is headed for a horrible catastrophe.

### False Frenzy

What I saw at that time was a people lashed and intoxicated again and again into a nationalistic and falsely revolutionary frenzy, but a people nevertheless depressed, fearful of future ills, fatalistically indifferent; a people that seized avidly upon every foreign newspaper and that saw itself delivered up to a questionable adventure without the slightest chance of resistance. The people foresaw every conceivable misfortune, war, economic catastrophe, dissolution of the nation, disquieted as they were by their ignorance by their impotence in the face of propaganda, by a thousand horrors that took place in their midst and by their moral isolation.

As time passed it seemed that things had always been like this and that they had to be so. The regime was not only recognised abroad but its interests were even promoted—partly for the sake of peace and partly out of admiration for a country that denied labour the right to strike. The older generation resigned and a young generation grew up that knew nothing but the 'heroic life.'

Then the war came, the real war, which to an uncritical people like the Germans, is simply a challenge to its manhood, its biological soundness—its willingness to sacrifice. The Germans did their best—and their worst. In their name, through their hands, bestial rulers committed atrocities at which the heart of humanity trembles,—unatonable, unforgettable. At the same time the war was lost as soon as the 'Blitz' had—once more—failed. As long as possible they refused to recognise the fact, and when they finally did recognise it, then ingrained fanaticism and Gothic pathos in the face of destruction were made to replace the lost faith in victory.

### Rushing To Hell

It was a terrible sight to see an entire nation gambling desperately and rushing to hell with its eyes wide open. Attempts to break away, to unseat the regime, to save what of substance and of future might still be saved, failed ignominiously. Never had a nation acquired more cruel rulers, masters who more ruthlessly insisted that it should perish with them.

The national catastrophe which the regime carried in its bosom has come. For twelve years we had to wait for it with a mingling of horror and hope. Yes, we wished it for the sake of the logic of morality, out of genuine hatred, out of desire for the punishment of absurd wickedness in accord with the moral lesson. And now that the debacle is here, ruin of unprecedented extent, an all-embracing, moral, spiritual, military, economic bankruptcy without parallel—now our pity for so much misguided history, for so much imprudence, for so much loyalty to dead ideals, for so much defiance of the real demands of the present world—now our pity nevertheless equals our satisfaction: it is a pity that is by no means purely altruistic, for everything German is concerned and is placed in jeopardy, including the German spirit, German thought, the German word; and we are forced to face this question whether in future 'Germany' in any of its manifestations can dare to open its lips in human affairs.

### Underworld Scum

The downfall of National Socialism into limbo, into the underworld to which it always belonged—for it was scum of the underworld, the lowest, that had risen with it to the surface—why should it not fill us with satisfaction! And more than satisfaction—it is comfort and bliss to experience the restitution of the honour and liberty of the European peoples, particularly, the renascence of France from the deepest humiliation.

One thing is certain; there must be an end of the martial Reich that never understood the meaning of the word 'liberty' that regarded as 'liberty' only its own right to enslave others. The mechanical romanticism called Germany was such a curse for the world that no measure whatever that tends to destroy it as a state of mind can be disapproved. The hope remains that with the co-operation of the German will itself purified by cruel suffering, a form of government and of life for the German people may be found that will encourage the development of its best power, and educate it to become a sincere co-worker for a brighter future of mankind.

GRAND MUSIC RECITAL

*( in aid of the proposed Carnatic Music School in Colombo )*

BY

**V. V. SATAKOPAN, B. A.**

Famous leading Cinema Actor in "Modern Youth," "Luck," "Venuganam" and "Mathana Kama Rajan" and one of the leading exponents of Carnatic Music of South India.

*Accompaniments.*

Mysore T. Gururajappa — *Violin.*
(brother of Mysore T. Chowdiah)
Tanjore S. Ramdoss Rao — *Mirdhangam.*
Pudukottah M. Thiagarajan — *Kenjira.*

AT THE TOWN HALL, JAFFNA,

*ON SUNDAY AT 6 P. M. 20th MAY, 1945.*

**TICKETS:** { Reserved Rs. 5; 1st & 2nd Class Rs. 3; and Rs. 2.

A RARE OPPORTUNITY TO ENJOY HIGH CLASS MUSIC AND HELP A GOOD CAUSE.

19—1.

Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam, residing at Tellippalai, at the American Ceylon Mission Press, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org